## திராவிடத்தால் வாழ்கிறோம்

**893**

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

## கழகம் கண்ட சட்டப் போராட்டங்கள்

**தமிழ்.கா.அமுதரசன்**

**12**

கழகம் நடத்திய உயிர்ப்புமிக்க சட்டப் போராட்டங்களை உணர்வுப் பூர்வமாக விவரிக்கும் தொடர்!

# பேருந்துகள் அரசுடைமை; கலைஞர் கலைத்த தேன்கூடு!

தமிழ்நாட்டுச் சாலைகளில் மின்சாரப் பேருந்துகளைக் களமிறக்கத் திட்டமிட்டு வருகிறது நம் திராவிட மாடல் அரசு. முதற்கட்டமாக, இந்தியாவுக்கே முன்னோடியாக சென்னை சாலைகளில் மின்சாரப் பேருந்துகள் இயங்கத் தொடங்கிவிட்டன. மகளிர் விடியல் பயணத் திட்டத்தை மாபெரும் புரட்சியாக நிகழ்த்தியிருக்கிறது. தவிர, பள்ளி- கல்லூரி மாணவர்களுக்குக் கட்டணமில்லாப் பயணம், விவசாயிகளுக்கு சலுகைக் கட்டணப் பயணம், சிறுவர்கள் மூத்த குடிமக்கள், மாற்றுத்திறனாளிகள், மாற்றுப் பாலினத்தவர், சுதந்திரப் போராட்ட வீரர்கள், மூத்த தமிழ் அறிஞர்கள், மொழிப்போர் தியாகிகள், நாடகக் கலைஞர்கள் சட்டமன்ற, நாடாளுமன்ற இந்நாள், முன்னாள் உறுப்பினர்களுக்கான பயணக் கட்டணச் சலுகைகள் என பெரும் சேவையை நிகழ்த்தி வருகிறது தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகங்கள்.

நிர்வாக வசதிக்காக 8 போக்குவரத்து நிறுவனங்கள், தமிழ்நாடு போக்குவரத்து மேம்பாட்டு நிதிக் கழகம், பல்லவன் போக்குவரத்து ஆலோசனை சேவைகள் நிறுவனம், சாலைப் போக்குவரத்து நிறுவனம், மோட்டார் வாகனங்கள் பராமரிப்புத் துறை என பல நிறுவனங்களை தமிழ்நாடு போக்குவரத்து துறை நிர்வகித்து வருகிறது.

இந்த மாபெரும் கட்டமைப்பை நிர்வாகம் செய்வது பெரும் சவால் என்றால், அதை உருவாக்கி, நடைமுறைக்குக் கொண்டு வந்ததும் அதற்கு முன் எவற்றுடனும் ஒப்பிட முடியாத மாபெரும் சாதனை. அதை நிகழ்த்திக் காட்டியவர் நவீன தமிழ்நாட்டின் சிற்பி முத்தமிழறிஞர் கலைஞர். அவர் செய்த புரட்சி, தனியார் வசம் இருந்த போக்குவரத்தை அரசின் வசம் கொண்டு வந்தது.

### பயணங்களை எளிதாக்குதல்!

1967-ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா தலைமையில் கழகம் முதன்முதலில் ஆட்சி அமைத்தபோது, பொதுப்பணித்துறை அமைச்சராகப் பொறுப்பேற்ற கலைஞர், போக்குவரத்துப் பயணங்களை எளிதாக்கினால்தான், மக்களை வளர்ச்சியை நோக்கி நகர்த்த முடியும் என, அதற்கான பணிகளில் கை வைத்தார். கழகம் 1957-ஆம் ஆண்டு சட்டமன்றத்தில் நுழைந்தபோதே பேருந்துகளை அரசு ஏற்று நடத்தவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்துள்ளது.

ஏனென்றால், அப்போது பேருந்துப் போக்குவரத்து முழுவதும் டி.வி.எஸ், ஏ.பி.டி., ஜெயவிலாஸ் என்று மிகச்சில முதலாளிகளின் கட்டுப்பாட்டிலேயே இருந்தது. அவர்கள் பெரும்பாலும் காங்கிரஸ்காரர்களாக இருந்தனர். அன்றைக்கு கழகம் பேருந்துகளை அரசுடைமையாக்க வேண்டும் என்று பேசியபோது, அது காங்கிரஸை ஒழிக்க நினைக்கும் சதி என்கிற அளவுக்கு அன்றைய நிதியமைச்சரே பகிரங்கமாகப் பேசியிருக்கிறார்.

அதேநேரத்தில் பேருந்துகளை அரசுடைமை யாக்க வேண்டும் என்ற கோரிக்கையை சுதந்திரத்துக்கு முன்பே காங்கிரஸ் தலைவர்கள் வலியுறுத்தியிருக்கின்றனர். 1944-ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட போருக்குப் பிந்தைய மீள் கட்டுமானக் குழுவில் இடம்பெற்றிருந்த ஆர்.கே.சண்முகம், டி.டி.கிருஷ்ணமாச்சாரி ஆகியோர் இந்தியா முழுமையும் உள்ள அனைத்துப் பேருந்துகளும் தேசியமயமாக்கப்பட வேண்டும் என்று பரிந்துரை செய்திருந்தார்கள். சுதந்திரத்துக்குப் பிறகு, திட்டக் குழுவும் பேருந்துகளை தேசியமயமாக்க வேண்டும் என்று ஆலோசனை கூறியுள்ளது. ஆனால், காங்கிரஸ் ஆட்சிக்கு வந்ததும், பேருந்து முதலாளிகளில் பலர் காங்கிரஸ்காரர்களாக இருந்ததால், பேருந்துகளை நாட்டுடமையாக்க ஆர்வம் காட்டவில்லை.



ஓவியம் : ரவி பேலட்

இப்படியான நிலையில்தான், கழகம் ஆட்சிக்கு வந்தபிறகு, பேருந்துகளை அரசுடைமையாக்க முயற்சி செய்தது. பேரறிஞர் அண்ணாவின் ஆதரவுடன் மிகத் துணிச்சலாக அந்த நடவடிக்கையை மேற்கொண்டார் கலைஞர்.

### கலைத்த தேன்கூடு

முதற்கட்டமாக கடலூர்- சேலம், சென்னை - சென்றாயன்பாளையம், காஞ்சிபுரம், விழுப்புரம் ஆகிய வழித்தடங்களில் இயங்கி வந்த தனியார் பேருந்துகளைக் கையகப்படுத்தி னார். ஆனால், அந்தப் போராட்டம் அவ்வளவு எளிதாக நிகழவில்லை என்பதை **'நெஞ்சுக்கு நீதி'**யில் பதிவு செய்கிறார்.

"நல்ல காரியங்கள் நடைபெறும் பொழுது வேண்டுமென்றே எதிர்ப்புக்குரல் எழுப்புவது சிலருக்கு வாடிக்கையான பொழுதுபோக்காகும். சமதர்ம கோட்பாட்டுக்குத் தக்கவலிமை சேர்த்திட, பஸ்களை நாட்டுடமையாக்க முற்பட்டபோதும் அப்படித்தான் எரிச்சலை உமிழ்ந்தனர்.

'பஸ் அதிபர்கள் தேன்கூடு போன்றவர்கள், அவர்கள் மீது கை வைத்தால் ஜாக்கிரதை!' என்று சட்டமன்ற காங்கிரஸ் உறுப்பினர் ஒருவர் கடுமையாக எச்சரித்தார் என குறிப்பிட்டுள்ளதுடன், காஞ்சிபுரத்தில் நாட்டுடமையாக்கப்பட்ட பேருந்துப் பயணத்தைத் தொடங்கி வைத்தபோது, அவர் மீது வைக்கப்பட்ட விமர்சனங்களுக்கும் அதற்கான பதிலையும் **'நெஞ்சுக்கு நீதி'**யில் குறிப்பிட்டுள்ளார்.

"அந்தத் தேன்கூட்டை எப்படி எடுக்க வேண்டும் என்று எனக்குத் தெரியும். அதற்கு போட வேண்டிய முக்காடுகளைப் போட்டுக் கொண்டுதான் தேன் கூட்டைத் தீண்டுவேன். இந்தக் கலையை நன்கு கற்றவன் நான். நாங்கள் தேனைத்தான் எடுப்போமே தவிர, தேன்கூட்டைக் கசக்கிப் பிழிய மாட்டோம். பஸ் அதிபர்களைத் தொல்லைப்படுத்த மாட்டோம்" எனக் குறிப்பிட்டிருகிறார்.

> "நல்ல காரியங்கள் நடைபெறும் பொழுது வேண்டுமென்றே எதிர்ப்புக்குரல் எழுப்புவது சிலருக்கு வாடிக்கையான பொழுதுபோக்காகும்.

முதற்கட்டமாக சில வழித்தடங்களில் புதிய முயற்சியை கழக அரசு மேற்கொண்ட போதே, உயர்நீதிமன்ற, உச்சநீதிமன்ற படியேறத் தொடங்கினர் பேருந்து முதலாளிகள். பேருந்துகளை அரசு ஏற்று நடத்தியபோது, அதை எதிர்த்து, முதலாளிகள் வழக்குத் தொடர்ந்தார்கள். மதுரை திருமங்கலத்தில் நகரப் பேருந்துகளை இயக்கக்கூடாது என்று ஒரு பேருந்து முதலாளி நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்து தடை வாங்கினார். அப்போது மக்கள் அந்தத் தடைக்கு எதிராக அரசுப் பேருந்துக்குப் பதிலாகத் தனியார் பேருந்து வந்தால், தடுத்து நிறுத்துவோம் என்று அறிவித்த சம்பவங்கள் எல்லாம் நிகழ்ந்துள்ளன.

பேரறிஞர் அண்ணாவின் அமைச்சரவையில், பொதுப்பணித்துறை அமைச்சராக பேருந்து அரசுடைமைக்கு எடுத்த முயற்சிகளுக்கு எதிரான வழக்குகள் மட்டுமல்ல, அண்ணாவுக்குப் பின்னர், முதலமைச்சராக கலைஞர் பொறுப்பேற்றதும் அடுத்தடுத்து அவர் கொண்டு வந்த மோட்டார் வண்டி உடைமை யாளர் பயணிப் பேருந்துகள் கையகப்படுத்தல் சட்டம், ஒப்பந்தப் பேருந்துகள் கையகப்படுத்தல் சட்டம் என்று சட்ட முன்வடிவுகள், ஒரு உரிமையாளர் 15 பேருந்துகளுக்கு மேல் வைத்துக்கொள்ள முடியாது என்ற சூழலை உருவாக்கியது.

கலைஞர் கலைத்த தேன்கூடு நீதிமன்றங்கள் வழியாக, கடும்நெருக்கடிகளை உருவாக்கியது. அவற்றையெல்லாம் முறியடித்து, போக்குவரத்துச் செயல்பாடுகளை அரசின் கட்டுப்பாட்டில் எப்படிக் கொண்டுவந்தார் என்கிற போராட்டத்தினை, வரும் வாரம் பார்க்கலாம்.

...தொடரும்

## ஒடுக்கப்பட்டோர் கல்வியில் பா.ஜ.க. ஒவ்வாமை!

பட்டியல், பழங்குடி சமூகத்தினர், நிலமற்ற ஏழை விவசாயக் கூலிகள், கைவினைக் கலைஞர்களின் குழந்தைகள், வெளிநாட்டில் உயர்கல்வி பயில ஒன்றிய 'சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சக'த்தின் சார்பில் உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது. 1954-55-இல் இருந்து செயல்படுத்தப்படும் இத்திட்டத்தில் இதுவரை பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் பயன்பெற்றுள்ளனர்.

2025-26 கல்வி ஆண்டுக்கான உதவித்தொகைக்கு 106 பேர் தேர்வு செய்யப்பட்டிருந்த நிலையில், 40 பேருக்கான உதவித்தொகை மட்டுமே உடனடியாக ஏற்கப்பட்டுள்ளது. எஞ்சிய 66 பேருக்கான உதவித்தொகை, நிதி இருப்பைப் பொறுத்து வாய்ப்பிருந்தால் வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளதாக 'டைம்ஸ் ஆஃப் இந்தியா' ஊடகத்தில் செய்தி வெளியாகியிருக்கிறது. பிரதமர் மோடி தலைமையிலான பொருளாதார விவகாரங்களுக்கான கேபினட் குழு, ஒப்புதல் வழங்காததே காரணம் என சம்பந்தப்பட்ட அமைச்சகம் தெரிவித்துள்ளது.

ஏற்கெனவே, ஆராய்ச்சிப் படிப்புகளுக்காக சிறுபான்மைச் சமூக மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் 'மௌலானா ஆசாத் தேசிய உதவித்தொகை' திட்டத்தின் நிதியும் கடந்த ஆண்டில் இருந்தே சரிவர விடுவிக்கப்படுவதில்லை என்ற குற்றச்சாட்டு நிலவுகிறது. இந்நிலையில், எஸ்.சி., எஸ்.டி. மாணவர்கள் வெளிநாட்டில் படிப்பதற்கான வாய்ப்புகளையும் குறைப்பது, ஒடுக்கப்பட்ட மக்களின் கல்வி மீது பா.ஜ.க. கொண்டிருக்கும் ஒவ்வாமையின் வெளிப்பாடுதான் என்ற விமர்சனங்கள் எழுந்திருக்கின்றன.

அதேசமயம், தமிழ்நாட்டில் திராவிட மாடல் அரசு, அண்ணல் அம்பேத்கர் அயலக உயர்கல்வி உதவித்தொகைத் திட்டத்தின் கீழ், நடப்பாண்டில் வெளிநாடு சென்று படிக்கும் எஸ்.சி., எஸ்.டி. மாணவர்களுக்காக 65 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

## ஃப்ளாஷ்பேக்




### தலைவருடன் தந்தையும் தனயனும்!



எஸ்.வி.எஸ்.சாகுல் அமீது

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இரண்டாவது முறை பொறுப்பேற்றபின் தாராபுரம் நகருக்கு வருகை தந்தார். அப்போது, அங்கு நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்ட மேடையில் அன்றைய நகரக் கழகப் பொருளாளரும் எனது தந்தையுமான எஸ்.வி.சக்கரை மைதீன் அவர்களுடன் சிறுவனாக நானும் இடம்பெற்றுள்ளேன். மரபணுக்களில் திராவிட சித்தாந்தம். எண்ணங்களிலும் இயக்க உணர்வு ஊட்டப்பட்ட ஒரு சாட்சி இந்த நிழற்படம்.

**–எஸ்.வி.எஸ்.சாகுல் அமீது, மாவட்ட தி.மு.க தொண்டர் அணித் தலைவர், திருப்பூர் கிழக்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### 'கலைஞர் கடிதங்கள்' வெளியீடு!

1986-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 12-ஆம் தேதி சென்னை ஏவி.எம்.ராஜேஸ்வரி மண்டபத்தில் டி.செங்கல்வராயன் தலைமையில், உடன்பிறப்புகளுக்கு கலைஞர் எழுதிய 'கலைஞர் கடிதங்கள்' முதல் பத்து தொகுதிகள் வெளியிடப்பட்டன. கழகத்தின் அன்றைய பொதுச் செயலாளர் பேராசிரியர் வெளியிட, எஸ்.நல்லபெருமாள் முதல் பிரதியைப் பெற்றுக்கொண்டார். அன்றைய துணைப் பொதுச் செயலாளர் நாஞ்சிலார், இராம.அரங்கண்ணல், எஸ்.எஸ்.தென்னரசு, ஆசிரியர் கி.வீரமணி, அப்துல் சமது, ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131